# M.C.O.P.No.31/2018

நாள் - 17.06.2022

S. செல்வக்குமார்

வா.சா.1 குறுக்கு விசாரணை

கேள்விகளை புரிந்து என்னால் பதில் சொல்லமுடியும். எஸ்.கே.நிட்ஸ் என்ற தொழிலை எனது சொந்த கட்டிடத்தில் நடத்தி வருகிறேன். 2010 ஆம் ஆண்டிலிருந்து சொந்த கட்டிடத்தில் நடத்தி வருகிறேன். அதற்கு முன்பு வாடகை கட்டிடத்தில் நடத்தினேன். என்னிடம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ESI, PF கட்டப்படுகிறதா என்றால் தற்போது வரை இல்லை. அந்த நிறுவனம் தற்பொழுது வரை நடைபெறுகிறது. அதன் உரிமையாளர் நான் தான். எனது மனைவி தான் பார்த்து வருகிறார். 2009 ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. KVB வங்கியில் Current Account என் கம்பெனிக்கு உள்ளது. எனக்கு விபத்து நடந்ததை புகார்தாரர் நேரில் பார்த்தாரா என்பது எனக்கு தெரியாது. இந்த விபத்தில் என்னுடைய வலது பக்க நெற்றியில் அடிப்பட்டது. TN-55-AM-0185 என்ற காரின் ஓட்டுநரை போலீசார் இது வரை கைது செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவர் மீது குற்றப் பத்திரிக்கையும் எந்த நீதிமன்றத்திலும்தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் தாக்கல் செய்த மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. கம்பெனிக்கு கணக்கு வழக்குகள் தாக்கல் செய்து கொண்டு தான் இருக்கிறேன். ரோட்டின் இடதுபுறமாக சென்ற காரின் மீது நான் தான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று தவறுதலாக மோதி விட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய தவறால் தான் விபத்து நடந்தது என்றாலும், கார் ஓட்டுநர் மீது எந்தத் தவறும் இல்லாததால் தான் அவர் மீது போலீசார் எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. Mistake of fact என்று குறிப்பிட்டு இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை கார் ஓட்டுநரின் தவறுகை எதுவும் இல்லை என்பதால் முடித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தின்போது நான் Helmet போட்டிருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் Helmet அணிந்திருந்தேன். இந்த விபத்தினால் எனக்கு எந்தவிதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையும், அதிவேகமும் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. கார் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லாததால் 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

Sd/- S. செல்வக்குமார்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2022.06.30 08:47:03 +05'30'

Subordinate Judge,
Avinashi.